IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO. 85/2021

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | BABU. R |
| FATHER'S NAME | : | RAMU |
| VILLAGE | : | OLD KATPADI |
| OCCUPATION | : | SECURITY |
| AGE | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 10th day of November 2023.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் பழைய காட்பாடியில் குடியிருந்து விஜடி யில் செக்யூரிட்டியாக வேலை செய்து வருகிறேன். தேதி மற்றும் மாதம் நியாபகமில்லை. கடந்த 2018ஆம் வருடம் ஒரு நாள் என்னுடைய உயர் அதிகாரியின் அறிவுறுத்தலின் பேரில் நானும் என்னுடன் பணிபுரியும் மகேஸ்வரன் என்பவரும் காட்பாடி காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு போலீசார் என்னையும் மகேஸ்வரனையும் விசாரணை செய்து கையொப்பம் பெற்றார்கள். எதற்காக கையொப்பம் பெற்றார்கள் என்று எனக்குத் தெரியாது. அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜர்கள் இரண்டிலும் உள்ள 2வது கையெழுத்துக்கள், ஒப்புதல் வாக்குமூலம் இரண்டிலும் உள்ள 2வது கையெழுத்துக்கள் என்னுடையது தான். அவைகள் முறையே அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.9 வரை ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் போலீசார் விசாரணையில், எங்கள் கல்லூரியில் உள்ள எஸ்பிஐ ஏடிஎம்—ல் பணம் திருடு போனது சம்மந்தமாக கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் எதிரிகளை கைது செய்து விசாரித்தபோது அவர்கள் திருட்டை ஒப்புக் கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளதாகவும், அதற்கு சாட்சியாக என்னையும், மகேஸ்வரன் என்பவரையும் இருக்கும்படி ஆய்வாளர் கேட்டபோது இருவரும் சம்மதித்ததாகவும், பின்பு எங்கள்



J JAYGANESH Digitally signed by J JAYGANESH

முன்னிலையில் 10.2.2018 ஆம் தேதி மாலை 16.00 மணிக்கு ஆஜர் எதிரிகள் இருவரும் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டது குறித்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலங்களில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்து கொடுத்துள்ளதாகவும், பின்னர் ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் எதிரி சரத்குமாரின் வீட்டில் இருந்து அன்றைய தினமே இரவு 10.00 மணி அளவில் எதிரி எடுத்து ஆஜர் செய்த ஹீரோ ே ஹாண்டா இருசக்கர வாகனம் ஒன்று, ஏடிஎம் மிஷின்களைத் திறக்கும் 4 சாவிகள் கொண்ட சாவிக் கொத்து ஒன்று, எதிரி பிரேம் குமார் எழுதிக் கொடுத்த ரகசிய பேப்பர் ஒன்று, ஆகியவற்றையும் இரவு 10.30 மணி அளவில் எதிரி பிரேம் குமார் வீட்டினிடம் இருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த யமாஹா இருசக்கர வாகனம் ஒன்று மற்றும் பணம் ரூபாய்,3,28,500/– ஆகியவற்றை போலீசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், அந்த மகஜர்களில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதவராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

J JAYGANESH Digitally signed by J JAYGANESH